BRAMPTON **Service and Information Update**

**ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையம் தனது வாடிக்கையாளர்களுக்காக ஏப்ரல் 12 ஆம் தேதி திறக்கவிருக்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 8, 2022) – சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின்மீது கவனம் செலுத்தியபடி, ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையம் (Brampton Entrepreneur Centre (BEC)) மற்றும் அதன் சார் - பணியிடங்களின் நேரடி சேவைகளுக்காக ஏப்ரல் 12, 2022 செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டு ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை திறந்திருக்கும்.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு சார்-பணியிடங்களால் பரிசீலிக்கப்பட்டு BEC யினால் ஒப்புதல் அளிக்கப்படவேண்டும். விண்ணப்பங்களை Brampton.ca/incubator யில் சமர்ப்பிக்கலாம். சார்-பணியிடங்கள் ஒப்புதல் அளிக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்காக காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பணியாற்றும்.

ஜூலை 4, 2022 இல் துவங்கும் வாரத்தில் இருந்து, சார்-பணியிடங்கள் வாரத்தில் மூன்று நாட்கள் திறந்திருக்கும், அந்த மூன்று நாட்கள் எவை என பின்னர் தீர்மானிக்கப்படும்.

இந்தச் சமயத்தில் BEC யின் வணிக ஆலோசகர்களுடனான ஆலோசனையானது, மெய்நிகர் முறையில் மட்டுமே இருக்கும் மற்றும் இதற்காக முன்னதாகவே பதிவு செய்துகொள்ள வேண்டும். லாக்கர்கள் கிடைக்கப் பெற மாட்டா.

நகரின் பொது கட்டிடங்களில் நுழைய முக கவசங்கள் இனிமேற்கொண்டு தேவைப்படாது என்றாலும், சார்-பணியிடங்களை உபயோகிப்பவர்கள் முக கவசம் அணிந்துள்ளவர்களுக்கு உகந்த மரியாதை கொடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உடல்ரீதியான சமூக விலகல், கூட்டம் கூடும் நபர்களின் எண்ணிக்கை வரம்பு மற்றும் தொற்று கண்டறிதல் சோதனை இனிமேற்கொண்டு தேவைப்படாது, என்றாலும், தனி நபர்கள் உடல்நலமில்லாமல் உணர்ந்தால் வீட்டிலேயே தங்கி விடுவது நல்லது.

பணி-சார் இடத்தை அணுகும் எவரும் தாங்கள் பணி செய்யும் இடத்தில் இருக்கின்ற எந்தப் பொருள்/இடத்தையும் (தொலைபேசி கூண்டு/கூட்டம் நடக்கும் இடம்) பணிக்கு முன்பாகவும் பின்பாகவும் சுத்திகரிப்பு செய்துவிட கோரப்படுகிறார்கள். சுத்திகரிப்புக்கான பஞ்சுத்துணிகள் கிடைக்கச்செய்யப்படும்.

ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையம் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: Brampton.ca/bec.

-30-

**ஊடக தொடர்பு CONTACT**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார
ஊடகம்
multiculturalmedia@brampton.ca